**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**DVC. No. 30/2023**

PW1

| | | | |
|---|---|---|---|
| Name | ரெஜினா (எ) கிருஷ்ணவேனி | Caste | |
| Father's/Husband Name | தர்மராஜ் | Calling | |
| Village | அகரகடம்பனூர் | Religion | |
| Taluk | | Age | 36 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 26-06-2025**

**2 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான். 17.05.2019 தேதியில் சீர்காழி வைத்தீஸ்வரன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. எங்களது திருமணத்தை எனது கணவரின் மாமா பேசி முடித்து வைத்தார். எனது மனுவில் நான் 30 பவுன் பேசப்பட்டு 15 பவுன் எனக்கு திருமணத்தின் போது போட்டதாக சொல்லியுள்ளேன். எனது மனுவில் எனது நகைகளின் மதிப்பு மற்றும் எடை எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது கணவருக்கு போட்ட நகையைப் பற்றி சொல்லியுள்ளேன்.

2. 15 பவுன் நகைக்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் திருமணத்தின் போது எந்த நகைகளையும் போடவில்லை என்றாலும் அதனால் தான் அதற்கான ரசீது உள்ளிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் திருமணத்திற்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் எனது கணவரின் வீட்டில் வசித்தேன் என்றால் ஒரு மாதம் வசித்தேன். எனது திருமணத்திற்கு 5 வருடங்களுக்கு முன்பே 3 ம் எதிர்மனுதாரர் பரமேஸ்வரி அவரது திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 3 ம்

எதிர்மனுதாரரை திருவாரூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். எனது கணவரின் ஊருக்கும் திருவாரூருக்கும் 40 கி.மீ மேலே தொலைவிருக்கும்.

3. நான் தற்போது என் அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். எனது அம்மா வீட்டில் நான் எனது தம்பி, என் அம்மா ஆகியோர் வசித்து வருகிறோம். எனது தம்பிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் திருமணத்திற்கு முன்பே M.Sc.,B.Ed., Computer Science படித்து முடித்துள்ளேன். நான் பிரைமரி பள்ளியில் எனது திருமணத்திற்கு முன்பே ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். என் அம்மாவின் வீடு சொந்த வீடு , என் அப்பாவின் பெயரில் உள்ளது. என் அப்பாவின் பெயரில் நிலம் உள்ளது என்றால் இல்லை.

4. எனது அப்பா பெயரில் உள்ள வீடு 5 சென்ட் இருக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த வீடு மற்றும் கொல்லைபுறம் தற்போது ரூ.50 லட்சம் மதிப்பு இருக்கும் என்றால் சரியல்ல, சுமார் 1 லட்ச ரூபாய்தான் இருக்கும். அந்த வீட்டின் மதிப்பு ரூ.50 லட்சம் இருக்கும் என்றாலும் நான் வழக்கிற்காக ரூ.1 லட்சம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த வீட்டின் எனக்கு ஒரு பங்கு உள்ளது என்றாலும் அதன் மதிப்பு 15 லட்ச ரூபாய் என்றாலும் 15 லட்ச ரூபாய் பொருமானம உள்ள பங்கு எனக்கு உள்ளதால் நான் 1ம் எதிர்மனுதாரரிடம் ஜுவனாம்சம் கோர இயலாது என்றாலும் சரியல்ல. எனது அம்மா கூலி வேலை செய்து வருகிறார்.

5. எனது அம்மாவிற்கு மாத வருமானம் ரூ.3000/-க்கும் குறைவாகத்தான் சம்பளம் வரும். எனது தந்தை 2016 ம் ஆண்டு இறந்து விட்டார். எனது பெற்றோரின் திருமணத்திலிருந்தே நான் மனுவில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள். எனது பெற்றோருக்கு அவர்களது திருமணத்திலிருந்தே சொத்து என்றால் அது தற்போது நாங்கள் குடியிருக்கும் அந்த வீடு தான். எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் அவரது வருமானமாக மாதம் ரூபாய் 1500 க்கும் குறைவாகத்தான் பெற்று வந்தார். எனது சகோதரி காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் இல்லை பெற்றோர் நிச்சயித்து தான் திருமணம் செய்து கொண்டார். அவரது திருமணம் 2009 ல் தான் நடைபெற்றது.

6. எங்கள் குடும்பத்தாருக்கும் எனது சகோதரிக்கும் இருந்த மன ஸ்தாபம் காரணமாக எனது திருமணத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

அவர் கலந்து கொண்டார். எனது கணவர் என்ன படித்துள்ளார் என்றால் அவர் B.Sc., படித்துள்ளார் என்று சொன்னார்கள். ஆனால் அவரது சான்றிதழ்களை நான் பார்க்கவில்லை. எனது கணவர் 8 ம் வகுப்பு வரை தான் படித்துள்ளார் என்பதால் அவருடன் சண்டையிட்டு நான் எனது அம்மா வீட்டில் உள்ளேன் என்றால் சரியல்ல. நகையினால் தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. நான் மனுவில் எப்போது எனது கணவர் வீட்டிலிருந்து பிரிந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆகஸ்ட் மாதம் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

7. நான் எனது மனுவில் எனது கணவர் வரதட்சணை கேட்டு அடித்து கொடுமைப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளதற்கு காவல் துறையில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் திருமணத்திற்கு முன்பு பள்ளியில் வேலை பார்க்கும்பொழுது எனக்கு மாத சம்பளம் ரூ.2500 ஆகும். திருமணத்திற்கு முன்பு ஒரு வருடம் மட்டுமே வேலை பார்த்தேன். தற்பொழுது நான் நாகப்பட்டினத்தில் உள்ள பென்டகன் மருத்துவமனையில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் இல்லை.

8. நான் மனுவில் குறிப்பிட்டுள்ளப்படி 2 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்கள் என்னை வக்கில்லாதவள் என்று திட்டியதை குறித்து காவல் துறையில் புகார் அளித்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிர்மனுதாரர்கள் என்னை கொடுமைப்படுத்தவில்லை என்றாலும், அவ்வாறு கொடுமைப்படுத்தியிருந்தால் காவல் துறையில் புகார் அளித்து அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் வீட்டில் திருட்டு பயம் இருப்பதால் எதிர்மனுதாரர்கள் எனது நகையை வாங்கி வைத்து கொண்டார்கள் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரர்கள் 30 பவுன் நகை மற்றும் 8 லட்ச ரூபாய் பணம் பாத்திரங்கள் ரூ.2 லட்சம், ரூ.75,000/- மதிப்புள்ள இரு சக்கர வாகனம் வரதட்சணையாக கேட்டார்கள் என்று நான் மனுவில் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு வரதட்சணை சம்பந்தமாக எந்த பேச்சு

வார்த்தையும் நடக்கவில்லை என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் எங்களிடம் வரதட்சனை எதுவும் பெறாமல் திருமணம் செய்தார் என்றாலும் திருமண செலவை அவரே பார்த்துக் கொண்டார் என்றாலும் சரியல்ல.

10. இந்த வழக்கிற்கு முன்பு இதே நீதிமன்றத்தில் DVC No.21/2023 என்ற வழக்கு தாக்கல் செய்து அதனை நான் திரும்ப பெற்றேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஜுவனாம்சம் மற்றும் நஷ்ட ஈடு பரிகாரம் கேட்கவில்லை என்பதால் அதனை திரும்ப பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் நஷ்ட ஈடு ரூ.20 லட்சம் கேட்ட அளவுக்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இழப்பையும ஏற்படுத்தவில்லை என்பதால் எனது இழப்பீட்டு பரிகாரம் கிடைக்கத்தக்கத்தல்ல என்றாலும் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பே எனது மாமனார் இறந்து விட்டதால், 2ம் எதிர்மனுதாரர் என் மாமியார் எங்களுடன் தான் வசித்து வந்தார். 2ம் எதிர்மனுதாரர் எனது கணவருடன் வசித்து வரும் வீட்டை தவிர வேறு வீடு இல்லை என்றால் சரியல்ல , முத்துப்பேட்டையில் ஒரு வீடு இருப்பதாக கேள்விப்பட்டேன்.

11. முத்துப்பேட்டையில் வீடு இருப்பதாக நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் 2ம் எதிர்மனுதாரருக்கு தற்போது வசிக்கும் வீட்டை தவிர வேறு வீடு இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் B.Sc, படித்ததாகவும் வெளிநாட்டில் ரூ.1,25,000/- சம்பாதிப்பதாகவும் பொய் சொல்லி திருமணம் செய்து கொண்டார். எனக்கும் எனது கணவருக்கும் இடையே பெரிய பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் தற்போது எனது கணவருடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேனா என்றால் இல்லை. நான் மனுவில் சொல்லியுள்ளது போல் ரூ-75,000/- மதிப்புள்ள இரு சக்கர வாகனம் யார் பெயரில் உள்ளது அது என்ன வாகனம் என்றால் Hero Passion Pro எனது தம்பி பெயரில் வாங்கி அதற்கான மாத தவணை நான் செலுத்தி வருகிறேன்.

12. 1ம் எதிர்மனுதாரர் எனக்கு அணிவித்த தாலி மற்றும் தாலி செயின் யாரிடம் உள்ளது என்றால் தாலி என்னிடம் உள்ளது தாலிசெயின் 3ம் எதிர்மனுதாரரிடம் உள்ளது- நான் மனுவில் 20 பவுன் நகை மற்றும் 6 லட்ச ரூபாய் பணம் பாத்திரங்கள் ரூ.2 லட்சம், ரூ.75,000/- மதிப்புள்ள இரு சக்கர வாகனம் ஆகியவற்றை திருப்பி தரவேண்டும் என்றும் அவ்வாறு இல்லையென்றால் ரூ.20 லட்ச ரூபாய் நஷ்ட ஈடு தர

வேண்டும் என்று நான் கேட்டிருப்பது எனக்கு கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ள நகை, பணம், கொடுக்குமளவுக்கு எங்களுக்கு வசதியில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. நான் மனுவில் சொல்லியுள்ள நகை மற்றும் பணம் கொடுக்குமளவுக்கு எனக்கு வசதியுள்ளது என்பதை காண்பிக்க ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும், நான் தான் அதிகம் படித்துள்ள திமிரிலும் 1ம் எதிர்மனுதாரர் அதிகம் படிக்காத காரணத்தாலும் வேண்டுமென்றே தாமாகவே 1ம் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் திருமணம் ஆனதிலிருந்தே தனிக்குடித்தனம் செல்ல வேண்டும என்றும் மாமியாரை வீட்டிலிருந்து அனுப்ப வேண்டும் என்று செயல்பட்டு வந்தேன் என்றால் சரியல்ல.

14. 3ம் எதிர்மனுதாரர் எங்களது திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகி அவரது கணவர் வீட்டில் குடியிருந்து வருகிறார் அவர் எந்த காலத்திலும் நான் சொல்வது போல் எனது கணவர் வீட்டில் குடியிருந்ததும் கிடையாது கொடுமைப்படுத்தியதும் கிடையாது என்றாலும் சரியல்ல. மேலும் 3ம் எதிர்மனுதாரர் திருவாரூரில் வேலை பார்த்து வருவதால் எனது வீட்டில் குடியிருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரின் குழந்தைகள் திருவாரூர் பள்ளியில் படித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் திருவாரூரில் வேலை பார்த்து வருவதாலும் அவர்களின் குழந்தைகள் திருவாரூர் பள்ளியில் படித்து வருகிறார்கள் என்பதாலும் அவர்கள் எ னது வீட்டிற்கு வருவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

15. நான் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை வஞ்சிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நன்றாக படித்துள்ளேன் என்பதாலும் நன்றாக சம்பாதித்து வருவதாலும் என்னை பாதுகாக்கும் அளவிற்கு போதிய வருமானம் இருப்பதாலும்

1ம் எதிர்மனுதாரரிடம் ஜுவனாம்சம் கோர எனக்கு தகுதியில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கைெயழுத்து செய்தார்.

ஒம்/-ர. மீனாட்சி, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,- கீழ்வேளூர்.